முதல்வரின் ‘திராவிட மாடல்’ ஆட்சியை உலகமே வியந்து பாராட்டுகிறது!

தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் மோடி அரசுக்கு தக்க பாடம் புகட்டுவோம்!

தென்சென்னை – சோழிங்கநல்லூர் கண்டனப் பொதுக் கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதி!

சென்னை,பிப்.10-

“முதல்வரின் ‘திராவிட மாடல்’ அரசை உலகமே வியந்து பாராட்டுகிறது. ஆனால் தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் மோடி அரசுக்கு தக்க பாடம் புகட்டுவோம்” என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தென்சென்னை மாவட்டம் சோழிங்கநல்லூரில் நடைபெற் கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்காததைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டனப்பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. அந்த வகையில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சோழிங்கநல்லூரில் (8.2.2025) நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் எழுச்சியுரையாற்றினார்.

அப்போது, அவர் ஆற்றிய உரை வருமாறு:

இந்தப் பொதுக்கூட்டம் இரவு 8 மணிக்குள் நடைபெற்று முடிந்து விடும். பொதுமக்களை நீண்ட நேரம் காக்க வைக்கக்கூடாது அதற்குள் கருத்துகளை எடுக்கச் சொல்லி அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட வேண்டும் என்ற சிறப்பான நோக்கத்தோடு இந்தப் பொதுக்கூட்டம் தலைமைக் கழகத்தின் சார்பில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த நாள் கொண்டாடப்பட வேண்டிய நாள் ஏனென்றால் ஈரோடு இடைத்தேர்தலில் ஓர் மகத்தான வெற்றியை தி.மு.கழகம் பெற்றிருக்கிறது. எவ்வளவு வாக்கு வித்தியாசம் என்றால்

93 ஆயிரத்து 286 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருக்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 66.233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். இதற்கெல்லாம் காரணம் யார் பெண்களாகிய நீங்கள் தான். இரண்டாண்டுகளுக்கு முன்னர் ஈ. வி.கே.எஸ். இளங்கோவனுக்கு பிரச்சாரம் செய்வதற்காக கழகத் தலைவர் சென்றார். அப்போது அந்த பிரச்சாரம் முடிந்து வரும்போது மிக விரைவில் தமிழ் நாட்டில் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அறிவித்ததற்குப் பிறகு அங்கு அறுபத்து ஆறாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றோம். அறிவித்த பிறகு கடந்த இரண்டாண்டுகளாக செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த வெற்றி என்பது மகளிரால் சாத்தியப்படுத்தப்பட்டிருக்கிற வெற்றி. முதலமைச்சர் அவர்களால் சாத்தியப்படுத்தப்பட்ட வெற்றி. தமிழ் நாடு முதலமைச்சரின் மனிதநேய குணங்களினால் சாத்தியப்படுத்தப்பட்டிருக்கிற வெற்றி. எனவே இந்தக் கொண்டாட்டத்தை செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்பில் கொண்டாடுகிறோம்.

ஈரோட்டில் மிகப் பெரிய வெற்றி!

இந்தத் தேர்தல் தொடங்குவதற்கு முன்பு சொன்னார்கள். தமிழ் நாட்டில் தி.மு.க.வுக்கு ஆதரவு குறைந்துகொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். நாமெல்லாம் யாரும் தேர்தல் பணியாற்றுவதற்குச் செல்லவில்லை. கழகத் தலைவர் சொன்னார் இந்த ஆட்சியின் சாதனைகள் ஈரோடு இடைத்தேர்தல் வெற்றியைத் தேடித்தரும். நீங்கள் யாரும் ஈரோட்டிற்குச் சென்று பணியாற்றத் தேவையில்லை என்று சொன்னார். அந்த வகையில் இந்த வெற்றி மிகப்பெரிய வெற்றி. பிரம்மாண்ட வெற்றி. இதுவரை தமிழக வரலாற்றில் இல்லாத வெற்றி. 93 ஆயிரம் வாக்குகள் வித்தியாசம் என்பது இதுதான் முதல்முறை. ஈரோடு இனி யாரோடு என்று சொன்னோம். தமிழ்நாடு இனி என்றும் தி.மு.க.வோடு என்று முடிவெடுத்து அறிவித்திருக்கிறார்கள். இந்த வெற்றி இனி எப்போதுமே தொடரும்.

2019ஆம் ஆண்டிலிருந்து தி.மு.கழகம் எப்போதும் வெற்றிபெற்றுக் கொண்டே வருகிறது. இந்தச் செய்தி இணையதளங்களில் பரவிக்கொண்டிருக்கிறது. 2019இல் நாடாளுமன்றத் தேர்தல் 2 லட்சத்து 62 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரை பாராளுமன்றத்திற்கு அனுப்பினீர்கள். அவரை மட்டுமல்ல. தமிழ்நாடு முழுவதும்

32 நாடாளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பினீர்கள்.

மீண்டும் சட்டமன்ற இடைத்தேர்தல் தி.மு.க. வெற்றி. 2019இல் 9 மாவட்டங்களுக்கு ஊராட்சிமன்றத் தேர்தல் அதில் தி.மு.க. 98 சதவிகிதத்திற்கு மேல் வெற்றி பெற்றோம். 2019இல் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று, ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறோம். 2022 நகராட்சித் தேர்தலில் தி.மு. கழகம் வெற்றி. 2023 ஈரோடு இடைத்தேர்தல் வெற்றி. 2024இல் மீண்டும் தமிழச்சி தங்கபாண்டியன் 2 லட்சத்து 23 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இதே போல் 40 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் நாம் வெற்றி பெற்றோம். 2024இல் இரண்டு இடைத் தேர்தல்கள் விலவங்கோடு, விக்கிரவாண்டி ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றோம். இன்றைக்கு ஈரோடும் மிகப்பெரிய அளவிலான வெற்றியைப் பெற்றிருக்கிறது. எப்போது தேர்தல் வந்தாலும் அதில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எப்போதும் மிகப்பெரிய வெற்றியை பெறுவார் என்பதற்கு இந்த மாநாட்டிற்கு நிகரான பொதுக்கூட்டம்தான் சாட்சி.

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னாள் ஆட்சிக்கு வந்தபோது, மழையும் வந்தது. செங்கல்பட்டு மாவட்டத்தில் 40 ஏரிகளிலிருந்து இருந்து வருகிற உபரிநீர் சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பெரும் வெள்ளநீர் சுழ்ந்தது. பேருந்து மற்றும் நாங்கள் யாருமே உள்ள வரமுடியவில்லை. இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், மண்டலக்குழுத் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் இங்கிருக்கிற தடுப்புச்சுவரை உடைத்து அந்தத் தண்ணீரை சதுப்புநிலத்திற்கு அனுப்பினார்கள். அப்போது நம் முதலமைச்சர் அவர்கள் மூன்றுதடை வந்து சுனாமிநகர்.பெரும்பாக்கம், செம்மஞ்சேரி பகுதிகளுக்கு வந்து அதனைப் பார்வையிட்டார்கள். இது வரை எந்த முதலமைச்சரும் மழை, வெள்ளப் பாதிப்புகளுக்கு மூன்றுதடவை செம்மஞ்சேரிக்கு வந்ததே இல்லை.

முதலமைச்சரின் வரலாற்றுச் சாதனை!

இப்படி இந்த வெள்ளத்தை எப்படி தடுப்பது என்பதை நீர்வளத்துறைக்கு தெரிவித்த நேரத்தில், ஒரு ஐ.ஏ.எஸ். தலைமையில் ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, அவர்கள் தெரிவித்தது, நூக்கம்பாளையம், தாளம்பூர் பகுதிகளில் மிகப்பெரிய அளவிலான கால்வாய் கட்டி அதன்வழியாக சதுப்புநிலத்திற்கு ஒக்கியம் மடுவுக்கு உபரிநீரைத் திறந்துவிட்டால் வெள்ளதை சமாளிக்கலாம் என்று தெரிவித்து, அதை முதல்வரிடம் தெரிவித்து அதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்கிற நேரத்தில் ரூ.304 கோடி ரூபாய் ஆகும் என்று, அதனை முதலமைச்சர் அவர்கள் வழங்கி அந்தப் பணியினை வந்து இரண்டு முறை பார்வையிட்டு ஆய்வு செய்தார் நம் முதலமைச்சர் அவர்கள். வரலாற்றில் எந்த முதலமைச்சரும் செய்யாத சாதனை இந்த சோழிங்கநல்லூர் பகுதி வெள்ளப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

மிகப்பொறுத்தமாக இந்தக் கூட்டத்தை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் அவர்கள் சுனாமி நகரில் நடத்தி. சுனாமி அலைபோல் மக்கள்கூட்டத்தினர் இங்கே திரண்டு வந்திருக்கிறார்கள். இங்கே பேசிய தமிழச்சி தங்கபாண்டியன் உட்பட அனைவருமே இந்த ஆட்சியின் சாதனைகளை விளக்கி சொன்னார்கள்.

இந்த ஆட்சி அமைந்ததற்கு இலவச பேருந்துப் பயணம், இதைத்தேர்தல் அறிவிக்கையில் அறிவிப்பதற்கு முன் எல்லோருமே சொன்னார்கள். இதெல்லாம் சாத்தியம் இல்லை என்று. ஆனால் நம் தலைவர் அவர்கள். நான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், சொல்வதைத்தான் செய்வேன். செய்வதைத் தான் சொல்வேன் என்று அறிவித்து இதை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்த இலவசப் பேருந்து பயணத் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்பு அரசுப் பேருந்துகளை 32 சதவிகித மகளிர் பயன்படுத்திக்கொண்டிருந்தனர். இந்த இலவச பேருந்து பயணம் அறிவித்ததற்குப் பிறகு தினந்தோறும் அரசுப் பேருந்து பயணங்கள்

57 லட்சமாகும். ஆக, 25 லட்சம் அரசு பேருந்து பயணங்கள் அதிகரித்திருக்கிறது. இந்தத் திட்டத்தால் ஒவ்வொரு மகளிர் சேமிப்பிலும் ரூ.858 ரூபாய் சேமிக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ஐ.நா.விருது!

அதேப்போல் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் இதுவரை 2 கோடியே 40 லட்சம் பேர் பயன்டைந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பாராட்டி ஐ.நா. சபையே மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு விருது தந்திருக்கிறது. United Nations Interagency taskforce award என்கிற விருதை கடந்தாண்டு வழங்கினார்கள். இந்திய வரலாற்றில் ஒரு மாநில அரசிற்கு அதுவும் ஒரு துறைக்கு ஐ.நா. விருது என்பது இது தான் முதல் முறை.

மற்றுமொருத் திட்டம் நம்மைக் காக்கும் - 48 திட்டம். இத்திட்டத்தை 2021ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன்மூலம் தமிழ் நாட்டில் எங்கு விபத்து நடந்தாலும். முதல் 48 மணிநேரத்தில் ரூ.1லட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் இது வரை 3 லட்சத்து 36 ஆயிரம் பேர் விபத்து ஏற்பட்டு உயிர் பிழைத்திருக்கிறார்கள். இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.296 கோடி ரூபாயாகும். இரண்டாண்டுகளுக்குப் பிறகு இத்திட்டத்திற்கான உதவித்தொகையை ரூ.2 லட்சமாக உயர்த்தி முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

டெல்லியில் பா.ஜ.க. வெற்றி பெற்றது எப்படி?

டெல்லியில் பா.ஜ.க. வெற்றிப் பெற்றிருக்கிறது என்று சொல்கிறார்கள். எதனால் அங்கு பா.ஜ.க வெற்றிப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிற மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை. நாங்கள் (பா.ஜ.க) ஆட்சிக்கு வந்தால் இங்கே கொடுப்போம் என்று அறிவித்ததனால் பா.ஜ.க வெற்றிப் பெற்றிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்று ஒரு பேட்டியைக் கொடுத்திருக்கிறார். அதில் அவர் ஈரோடு தேர்தல் வெற்றியைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இந்தத் தேர்தலைப் பற்றிக் கருத்தே கூறாமல், டெல்லியில் பா.ஜ.க அலை வீசுவதாகவும், இந்தியா கூட்டணித் தோல்வியை தழுவியதாகவும் தெரிவித்திருக்கிறார். டெல்லியில் இந்தியா கூட்டணியா? போட்டியிட்டது. இந்தியா கூட்டணி என்பது தி.மு.க. காங்கிரஸ், ஆம்ஆத்மி, கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க. உள்ளிட்ட இன்னும் பல்வேறு மாநிலக் கட்சிகள் சேர்ந்ததுதான் இந்தியா கூட்டணி. அங்கு இந்தியா கூட்டணி போட்டியிடவில்லை. ஆம் ஆத்மி, காங்கிரஸ் தனித்தனியாக போட்டியிட்டது. இது எதுவுமே தெரியாமல், இந்தியா கூட்டணி தோல்வியுற்றதாக கூறியிருக்கிறார்.

2014ஆம் ஆண்டு முதல் மோடி பிரதமராக வந்ததிலிருந்து தி.மு.க. வஞ்சிக்கப்படுகிறது. மெஜாரிட்டியாக பா.ஜ.க ஆட்சிக்கு வராததற்குக் காரணம் தி.மு.க.வும். தமிழ்நாடும் என்கிற காரணத்தால் தொடர்ந்து தமிழ் நாட்டை வஞ்சித்துக்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு என்கிற வார்த்தை ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒரு இடத்தில்கூட இடம்பெறவில்லை. தமிழ்நாடு என்கிற வார்த்தையை உலகத்தில் இருக்கிற ஒவ்வொருவரின் இதயத்திலிருந்தும் பிரித்தெடுக்க முடியாது என்கிற நிலையை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்.

உலகம் வியக்கிறது!

தொல்லியல் துறையில் பல்வேறு அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். இரும்பை முதன்முதலில் பயன்படுத்தியது. இரும்பின் தொன்மை கிட்டத்தட்ட 5,300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் பயன்படுத்தியிருப்பதை முதலமைச்சர் அவர்கள் உலகத்திற்கு அறிவித்திருக்கிறார். 3600 ஆண்டுகளுக்கு முன்பு நெல் பயன்பாடு தமிழகத்தில் இருந்திருக்கிறது. 2700 ஆண்டுகளுக்கு முன்பு நகர நாகரிகம் என்பது தமிழ்நாட்டில் இருந்திருப்பதற்கான ஆதாரத்தை முதல்வர்கள் அவர்கள் அறிவித்திருக்கிறார். இவற்றை உலக நாடுகளில் உள்ளவர்கள் வியந்து பார்க்கிறார்கள். தமிழ்நாடு உலகத்தினர் உள்ளங்களில் நீக்கமற நிறைந்திருக்கிறது.

2014 முதல் 202223ஆம் ஆண்டு வரை மோடி அரசிற்கு தமிழ் நாட்டின் சார்பில் நேரடி வரி வருவாயாக எவ்வளவு நிதி கொடுத்திருக்கிறோம் என்றால், ரூ.62.3 லட்சம் கோடி வழங்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு எவ்வளவு நிதி பகிர்ந்துகொடுத்திருக்க வேண்டுமென்றால், ரூ.14 லட்சம் கோடி கொடுத்திருக்க வேண்டும். சிறிய மாநிலங்கள், பெரிய மாநிலங்கள் என்று பார்த்து நிதி பகிர்ந்தளிக்க வேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டிற்கு 58,000 கோடி நிதி ஒன்றிய அரசு வழங்கியிருக்கிறது. இது பாரபட்சம் இல்லையா? குறைவாக வரி வருவாய் வரக்கூடிய. தமிழ்நாட்டை விட குறைவாக வரி வருவாய் தரக்கூடிய உத்திரபிரதேச மாநிலத்திற்கு ரூ.2,55,000 கோடி நிதி தந்திருக்கிறார்கள். இதை எதோடு ஒப்பிட வேண்டுமென்றால், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கருநாடகா, தெலுங்கானா போன்ற ஐந்து மாநிலங்களுக்கு ரூ.2,24,000 கோடி நிதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஓரவஞ்சனை இல்லையா? பாரபட்சம் இல்லையா? தென்னிந்தியாவை வஞ்சிக்கிற செயல் இல்லையா?

இதைக் கண்டித்துத்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சர் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்தக் கண்டனக் கூட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார். நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்திற்கு (Slum Clearance Board) ஒன்றிய அரசு ஒன்றரை லட்சம் ரூபாயை ஒன்றிய அரசு வழங்குகிறது. மாநில அரசு கொடுக்கிற நிதி ரூ.11 லட்சத்திலிருந்து ரூ.12 லட்சம் வரை வழங்குகிறார்கள். நமது அரசாங்கத்தின் சார்பில் ஒன்றிய அரசிற்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த நிதியை கொஞ்சம் கூடுதலாக்கிக் கொடுங்கள் என்றால், இந்த பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் அதற்காக வரவில்லை.

கிடப்பில் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை!

எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு பத்து ஆண்டுகளாக கிடப்பில் கிடக்கிறது. அதற்கும் நிதி ஒதுக்கவில்லை. தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரைக்கும் ஓர் உயர்மட்ட சாலை வேண்டுமென்பது தமிழ்நாடு அரசின் கோரிக்கை. ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நமது நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் கோரிக்கை வைத்திருக்கிறார். அதற்கான எந்தவிதமான அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை.

அதுமட்டுமல்ல. சென்னையில் ஃபெஞ்சால் புயல் பாதிப்பு ஏற்பட்டது. அதற்கு முன்னால் மிக்ஜாம் புயல் பாதித்தது. நாம் ஆட்சிக்கு வந்தபிறகு இரண்டு புயல் பாதிப்புகள் சென்னையைப் பொறுத்தவரை. தமிழ்நாடு முழுவதும் பாதிப்புக்குள்ளானதற்கு கணக்கு எடுத்து 45,000 கோடி ரூபாய் வேண்டுமென்று, நமது முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசை அணுகினார்கள். ஓர் 50 சதவிகிதம் கொடுத்திருந்தால் 22,500 கோடி 25 சதவிகிதம் கொடுத்திருந்தால் 15,000 கோடி. எவ்வளவு கொடுத்தார்களென்றால் வெறும் ரூ.276 கோடி. சுனாமி நகர் மழைநீர் வடிகால்வாய் கட்டுவதற்கு ரூ.300 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. ஒன்றிய அரசு கொடுத்திருக்கிற ரூ.276 கோடி சுனாமிநகரில் ஓர் சிறிய கால்வாய் கட்டுவதற்குக்கூட பத்தாது. அப்படியானால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புக்கு ஒன்றிய அரசு செய்த காரியமென்ன?

மகாத்மா காந்தி வேலை உறுதி யளிப்புத் திட்டம். தேர்தல் அறிக்கையில் இந்தியா கூட்டணியில் நாங்கள் வெற்றிபெற்றால், ஒரு நாள் ஊதியத்தை ரூ.400ஆக உயர்த்தி வழங்குவோம் என்று அறிவித்தார்கள். ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை என்பதை 150 நாட்களாக உயர்த்திக்கொடுப்போம் என்று சொன்னார்கள். நாம் அறிவித்திருக்கிறோம் என்பதற்காக இதற்காக எந்தவித அறிவிப்பும் வரவில்லை. இந்திய பிரதமர் மோடி அவர்கள் மாணவர்களின் கல்விக்கடன்களை தள்ளுபடி செய்வோம் என்று அறிவித்தார். அதையும் செய்யவில்லை. மாறாக தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கடன்களை முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார். ஆதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் பெற்றக் கல்விக் கடன் ரூ.48.95 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் பிப்.3 அன்று ரத்து செய்து ஒரு வரலாற்றுப் புரட்சியை செய்திருக்கிறார்.

ஆதிதிராவிடர் மாணவர்கள் பெற்ற கடனை ரத்து செய்ய மனமில்லை!

ஒன்றிய அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது. எங்கேயாவது ஆதிராவிடர் பழங்குடியின மாணவர்கள் பெற்ற கல்விக் கடன்களை ரத்து செய்திருக்கிறார்களா? அதற்கு மாறாக யாருக்கு நீங்கள் கல்விக்கடன்களை ரத்து செய்துகிறீர்கள். அம்பானிக்கும், அதானிக்கும் ரத்து செய்துகொண்டிருக்கிறீர்கள். அவர்கள் பெற்ற கடன்கள் 25 லட்சம் கோடி. அவற்றை ரத்து செய்கிறீர்கள். ஆதிராவிட, பழங்குடியின, ஏழை மாணவர்கள் பெற்ற கடன்களை ரத்து செய்வதற்கு உங்களுக்கு மனம்வரவில்லை.

திருவள்ளூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய கண்டனக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். ஒன்றிய அரசின் ஆட்சிக்கு முட்டுக்கொடுக்கக்கூடிய ஆந்திராவிற்கு கடந்தாண்டு நிதி ஒதுக்கினீர்கள். இந்தாண்டு பீகாருக்கு நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். உங்களுக்கு முட்டுக்கொடுக்கக்கூடிய மாநிலங்களுக்கு அதிகமான நிதியை ஒதுக்குகிறீர்கள் என்று பேசியிருக்கிறார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் சிறப்பான திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். நந்தனம் எம்.சி.ராஜா விடுதியில் ரூ.40 கோடி ரூபாய் செலவில் மாணவர்களுக்காக கட்டடம் ஒன்று சிறப்பான வகையில் கட்டப்பட்டிருக்கிறது. அதில் 480 மாணவர்கள் தங்கி பயன்பெறுகிற வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. 28 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கியிருக்கிற தமிழ்ப்புதல்வன் திட்டம். ஆறாம் வகுப்பிலிருந்து அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்குகிற புதுமைப்பெண் திட்டத்தில் 4 லட்சத்து 25 மாணவிகள் பயன்பெறுகின்றனர். மாணவிகள் மட்டும் பயன்பெற்றால் போதுமா? மாணவர்களுக்கும் மாதந்தோறும் வழங்குகிற தமிழ்ப்புதல்வன் திட்டத்தால் 3லட்சத்து 28 மாணவர்களுக்கு ரூ.360 கோடி செலவில் பயன்பெற்று வருகின்றனர்.

சோழிங்கநல்லூர் தொகுதி வளர்ச்சிக்கு கோரிக்கைகள்!

சட்டமன்றத்தில் எப்போதெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அப்போது சோழிங்கநல்லூர் வளர்ச்சிக்காக சட்டமன்றத்தில் கோரிக்கைகள் வைத்து அதை நிறைவேற்றுபவர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ். தற்போது சோழிங்கநல்லூரில் ரூ.50 கோடி ரூபாய் செலவில் 200 படுக்கைகளுடன் ஒரு மருத்துவமனைக் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதேப்போல மேடவாக்கம், பெருங்குடி, துரைப்பாக்கம், கலைஞர் பெயரில் இருக்கிற ஒரு சாலை ஆகியவற்றில் சுங்கச்சாவடிகளை தாண்டித்தான் செல்ல வேண்டும் என்கிற நிலை இருந்தது. உலகம் பூராவும் சுங்கச்சாவடிகள் இருக்கின்றன. ஆனால் இங்கு இருக்கிற சுங்கச்சாவடிகள் விதிகளுக்கு புறம்பானது. மாநகராட்சி எல்லைக்குள் சுங்கச்சாவடிகள் இருக்கக் கூடாது என்பது விதி. அதையும் மீறி அப்போது 10 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஜெயலலிதா, எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் மக்கள் பணத்தை சுரண்டிக்கொண்டிருந்தனர். பாராளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் இது பற்றி பேசினார்.

சுங்கச் சாவடிகள் அகற்றம்!

அப்போது சோழிங்கநல்லூரியில் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தளபதி அவர்களின் அனுமதியைப் பெற்று Don't want Dollgate என்கிற போராட்டத்தை நடத்தினோம். அதில் 40 ஆயிரம் பேர் பங்கேற்ற மிகப்பெரிய போராட்டமாக நடைபெற்றது. சமூக வலைத்தளங்களில் அப்போது அது உலகம்பூராவும் டிரெண்டிங் ஆனது. தளபதி அவர்கள், தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு அந்த சுங்கச்சாவடிகள் அகற்றப்படும் என்று அறிவித்தார். அதேபோன்று அது அகற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல் மடிப்பாக்கம், புழுதிவாக்கம், பகுதிகளில் ரூ.1400 கோடி செலவில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டிருக்கிறது. சோழிங்கநல்லூரில் 500 கோடி செலவில் மழை நீர்வடிகால்வாய்கள் கட்டப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் என்றாலும், நெம்மேலி கூட்டுக்குடிநீர் திட்டங்கள் என்று எதுவானாலும் அவைகள் மிகச் சிறப்பாக சோழிங்கநல்லூருக்கு செய்யப்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

மதுரை கிழக்கு தொகுதி தி.மு.க. சார்பாக

அலங்காநல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் இரண்டு நாட்கள் ஜல்லிக்கட்டு விழா!

விழா முன்னேற்பாடுகள் – அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்து தகவல்!

மதுரை, பிப்.10-

மதுரை கிழக்கு தொகுதி திமுக சார்பில் வருகிற 11 மற்றும் 12ஆம் தேதி இரண்டு நாட்கள் அலங்காநல்லூர் அருகே உள்ள கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமான ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளதாக, விழா முன்னேற்பாடுகளை ஆய்வு செய்த பின் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஏறு தழுவுதல் எனும் ஜல்லிக்கட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஜல்லிக்கட்டு கலையரங்கம் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டது.

இதனை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து சிறப்பு செய்தார்.

இந்நிலையில் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி சார்பில் வருகிற பிப்ரவரி 11 மற்றும் 12 ஆகிய இரண்டு நாட்களிலும், சோழவந்தான் தொகுதி சார்பில் பிப்ரவரி 16ஆம் தேதியும் அதிவிமர்சையாக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

. இதற்காக தொகுதி அளவில் உள்ள ஜல்லிக்கட்டு காளைகளுக்கு பதிவு மற்றும் அனுமதி வழங்குவது தொடர்பான முன்னேற்பாடு பணிகளும், கலையரங்கத்தில் ஜல்லிக்கட்டு விழா நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணிகளை வடக்கு மாவட்ட செயலாளர், வணிக வரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அதன்படி காளைகள் ஏற்றி வரும் வாகனங்களுக்கான பாதை மற்றும் பார்வையாளர் மாவட்டத்திற்கு செல்வதற்கு வழிகள் குறித்து பார்வையிட்டனர். மேலும் அரங்கில் காளைகள் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் நிரந்தரமாக மின்விசிறிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதே போல் தற்காலிக குடிநீர் தொட்டிகள், உணவு உள்ளிட்டவைகள் வைப்பதற்கு தேவையான இட வசதிகள் அமைக்கப்பட்டு வருகிறது. அதேபோல் பாரம்பரிய வாடிவாசல் இரண்டு அடுக்கு தடுப்பு வேலிகள் அமைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றையும் ஆய்வு செய்த அமைச்சர் பி.மூர்த்தி அதிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மேலும் மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட மதுரை மேற்கு, வடக்கு ஒன்றியங்கள் மற்றும் திருப்பாலை, கண்ணநேந்தல், ஆனையூர் பகுதிகளுக்கென 11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஜல்லிக்கட்டு விழாவும், அதேபோன்று 12ஆம் தேதி புதன்கிழமை மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு ஒன்றியங்கள் மற்றும் வண்டியூர் பகுதிகளுக்கான ஜல்லிக்கட்டு விழா என தனித் தனியே நடைபெறுகிறது.

அதே போன்று 16ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை சோழவந்தான் தொகுதிக்கு என பிரத்யோகமாக ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது என மாவட்ட செயலாளர் வணிக வரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார் .